தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆவணி 2, திருவள்ளுவர் ஆண்டு—2047

2016 ஆகஸ்ட் 18, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

நோய் இன்னதென்று ஆராய்ந்து, அதன் அடிப்படைக் காரணத்தையும் ஆய்ந்து, முதலில் அதனைத் தீர்க்கும் வழியை ஆய்ந்து, அது உடலுக்கு ஏற்றவாறு அறிந்து செய்வதே சிறந்த மருத்துவமாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். கேள்வி நேரம் முடியட்டும்.* Zero hour-*ல் உங்களுக்கு அனுமதி தருகிறேன். (குறுக்கீடுகள்) கேள்வி நேரம் முடிந்தவுடன்* zero hour-*ல் நான் அனுமதிக்கிறேன். அதாவது, விதிகளின்படி, சட்டமன்றத்தின் முதல் ஒரு மணி நேரம், வினாக்கள்-விடைகள் நேரம். வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்த பிறகுதான்* zero hour *வருகிறது. அப்பொழுது உறுப்பினர்கள் என்ன பேச வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அதைப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடுகள்) விதிகளின்படி, முதலில் கேள்வி நேரம். கேள்வி நேரம் முடிந்ததற்குப் பின்னால்தான் உங்களுக்கு வாய்ப்புத் தரப்படும். அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, நீங்கள் பேச வேண்டியதை அப்போது பேசலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் கேள்வி நேரத்திற்கு முன்னால் வேறு பிரச்சினையை எழுப்ப*

வேண்டுமென்று என்னுடைய அறையில் வந்து கேட்கவில்லை. அப்படி கேட்காமல், இப்படி திடீரென்று வந்து, அவையின் நேரத்தை வீணடிக்கிறீர்களே? (குறுக்கீடுகள்) இப்பொழுது கேள்வி நேரம். நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் கேள்வி நேரத்தில் இப்படி எழுப்புவது தவறு. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். கேள்வி நேரம் முடிந்த பிறகு zero hour-ல் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். அதற்கு முன்னால், விதிகளின்படி முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் நேரம். (குறுக்கீடுகள்) இல்லை, அப்படியெல்லாம் செய்ய முடியாது. விதிகளின்படி அவையை நடத்த விடுங்கள். நீங்கள் இப்படியெல்லாம் விதிகளை மீறி வாய்ப்புக் கேட்டால், நான் வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உங்கள் இடத்திற்குப் போங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். கேள்வி நேரம் முடிந்தவுடனே உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்த பிறகுதான் உங்களுக்கு வாய்ப்புத் தரப்படும், உட்காருங்கள்.

80—

பறவைகள் சரணாலயம்

***251 திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் இதய